بسم الله الرّحمن الرّحيم

# ரமழானின் புனிதம் பேணுவோம்!

إنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ،

وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.
அல்லாஹ் கூறுகின்றான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللهَ الَّذِي تَسَاءَلُونَ

بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

அல்லாஹு சுப்ஹானஹு தஆலா நம் அனைவருக்கும் எப்படி இந்த ரமழான் மாதத்தை அடைவதற்க்கு அருள் புரிந்தானோ அதே போன்று நல்ல அமல்களை அதிகப்படுத்துவதற்கும் அல்லாஹ்வுடைய நெருக்கத்தை பெறுவதற்கும் அவன் அருள் புரிய வேண்டும் என்று அவனிடத்தில் வேண்டியவனாக, நம்முடைய முன் பின் பாவங்கள் அனைத்தையும் அவன் மன்னித்து அவனுடைய அன்பையும் கருணையையும் நமக்கு அருள வேண்டும் என்றும் அவனிடத்தில் வேண்டியவனாக ஆரம்பம் செய்கிறேன்.

அன்பிற்குரிய சகோதரர்களே, பெரியவர்களே! அல்லாஹு சுப்ஹானஹு தஆலா அடியார்கள் மீது வைத்திருக்கக்கூடிய கருணையின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் நன்மைகளையும் அல்லாஹ்வுடைய மன்னிப்பையும் நாம் அடைந்து கொள்வதற்கு உண்டான அந்த வாய்ப்புகளை நம்முடைய வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் அவன் கொடுத்துக் கொண்டே இருப்பது.

ஒரு வாய்ப்புக்கு பிறகு இன்னொரு வாய்ப்பு. ஒரு சந்தர்ப்பத்திற்கு பிறகு இன்னொரு சந்தர்ப்பம். இப்படியாக அல்லாஹு தஆலா அடியானுக்கு பாவமன்னிப்பின் அந்த வழிகளை வாய்ப்புகளை வழங்கி கொண்டே இருக்கின்றான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்;

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ يَقُولُ: «الصَّلَوَاتُ الْخَمْسُ، وَالْجُمْعَةُ إِلَى الْجُمْعَةِ، وَرَمَضَانُ إِلَى رَمَضَانَ، مُكَفِّرَاتٌ مَا بَيْنَهُنَّ إِذَا اجْتَنَبَ الْكَبَائِرَ» صحيح مسلم-233)

ஐந்து நேரத் தொழுகைகள் அடியானுடைய பாவங்களை போக்கி விடுகின்றன. ஒரு தொழுகையிலிருந்து இன்னொரு தொழுகைக்கு இடையில் அடியான் செய்யக்கூடிய அந்த சிறு பாவங்களையெல்லாம் இன்னொரு தொழுகையால் மன்னிக்கப்பட்டு விடுகின்றன.

إِنَّ الْحَسَنَاتِ يُذْهِبْنَ السَّيِّئَاتِ

நன்மைகள் பாவங்களைப் போக்கி விடுகின்றன என்று அல்லாஹ் கூறுகின்றான். (அல்குர்ஆன் 11 : 114)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) இதை தான் நமக்கு அழகாக கூறினார்கள்,

ஒரு தொழுகைக்கு பிறகு அடியான் அவனுடைய உலக வாழ்க்கையிலோ, வியாபாரங்களில் அல்லது தொழிலிலோ அல்லது அவனது மனைவி மக்களிடத்தில் செல்லும் போது அவனை அறியாமல் அவன் சில பாவங்களில் விழுந்து விடுவது உண்டு.

அல்லாஹு தஆலா இந்த அடியான் மீது வைத்திருக்கக் கூடிய அந்த கருணையால் அடுத்து இவன் தொழுகைக்கு வரும் போது இவன் செய்த அந்த உளூ, அதற்குப் பிறகு இவன் அவனுடைய வீட்டில் இருந்து மஸ்ஜித் வரை நடந்து வரக் கூடிய அவன் எடுத்து வைக்கக்கூடிய அந்த காலடி எட்டுகள். இப்படியாக இந்த அமல்களை கொண்டும் அடுத்து அவன் தொழக்கூடிய அந்த தொழுகையைக் கொண்டும் அவனுடைய பாவங்களை அல்லாஹு தஆலா போக்கிவிடுகின்றான், அழித்து விடுகின்றான்.

மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;

وَالْجُمْعَةُ إِلَى الْجُمْعَةِ

ஒரு ஜும்ஆ தொழுது விட்டு நாம் செல்கின்றோம். சென்ற ஜும்ஆ விலிருந்து இந்த ஜும்ஆ வரை நடந்த பிழைகள் எல்லாம் இந்த ஜும்ஆவால் மன்னிக்கப்பட்டு விடுகின்றன.

மேலும் கூறினார்கள்;

وَرَمَضَانُ إِلَى رَمَضَانَ

ஒரு ரமழானியிலிருந்து இன்னொரு ரமழான் வரை நிகழ்ந்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: முஸ்லிம், எண்: 233.

இந்த ரமழானை அடையப் பெற்ற நாம் அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) அவர்கள் வழி காட்டியது போன்று கழிக்கவேண்டும்.

அமல்களோடு, தக்வாவோடு, இபாதத்துகளோடு, திக்ருகளோடு, இஸ்திஃபாரோடு நாம் கழிப்போமேயானால் கண்டிப்பாக அல்லாஹு தஆலா போன ரமழானிலிருந்து இந்த ரமழான் வரை நம் மூலமாக என்னென்ன பாவங்கள் நிகழ்ந்துவிட்டனவோ அந்த பாவங்களையெல்லாம் போக்கி விடுகின்றான்; மன்னித்துவிடுகின்றான்.

நாம் இப்போது நம்மை என்ன பரிசோதிக்க வேண்டும்? இந்த ரமழானை அடைவதற்கு உண்டான அந்த தவ்ஃபீக்கை, அருளை நமக்கு கொடுத்த அல்லாஹு தஆலாவிற்கு நாம் நன்றி உள்ளவர்களாக இருக்கின்றோமா?

## ரமழானின் புனிதம் பேணுவோம்!

இந்த ரமழானை நாம் அடைய பெற்றதற்கு அல்லாஹ்விற்கு என்ன நன்றி செலுத்தினோம்? அல்லாஹ் நாடியிருந்தால் ரமழானுக்கு முன்பு உயிர் கைப்பற்றியவர்களில் நாமும் ஒருவராக ஆகி இருக்கலாம். அல்லாஹ் நம்முடைய உயிரையும் அவன் கைப்பற்றி இருக்கலாம். நம்முடைய உறவுகளில் நம்முடைய நண்பர்களில் நம்மோடு வாழ்ந்தவர்களில் எத்தனையோ பேர் ரமழானுக்கு முன்பு இந்த ரமழானை அடையாமல் அவர்கள் சென்று விட்டார்கள்.

இந்த ரமழானை அடைவதற்கு உண்டான அந்த தவ்பீக்கை –வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கினானே அதற்கு நாம் நன்றி உள்ளவர்களாக இருக்கின்றோமா?

நன்றியில் அந்த உயர்ந்த தரம் என்ன? இந்த ரமழானை அல்லாஹ்வுடைய இபாதத்துகளை கொண்டு, வணக்க வழிபாடுகளை கொண்டு, தொழுகை, நோன்பு, தர்மங்கள், குர்ஆனை ஓதுவது, திக்ருகள் ஓதுவது, இஸ்திஃபார் செய்வது, போன்ற இந்த நன்மைகளை கொண்டு இந்த ரமழானை ஈடுபடுத்தி கழிப்பது.

நம்முடைய உலக தேவைகளில் அவசியமான தேவைகள் போக நம்முடைய வாழ்வாதாரத்தை தேடுவதற்குரிய, நமது குடும்பத்தை சீர் செய்வதற்குரிய அவசியமான அந்த தேவைகளுக்குரிய நேரங்களை தவிர மற்ற அனைத்து நேரங்களையும் நம்மால் முடிந்த அளவிற்கு சிரமப்படுத்தி நம்மை நாமே கட்டுப்படுத்தி அல்லாஹ்வுடைய அந்த இபாதத்தில் நாம் நம்மை ஈடுபடுத்தி வைப்பது.

இதுதான் இந்த ரமழான் மாதம் நமக்கு அல்லாஹு தஆலா வழங்கியிருப்பதற்க்குரிய நன்றியாக இருக்கின்றது.

சகோதரர்களே! ரமழான் மாதத்துடைய சிறப்பு தெரியும். எப்பேற்பட்ட உயர்ந்த மாதம் இது.

شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنْزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِلنَّاسِ وَبَيِّنَاتٍ مِنَ الْهُدَى وَالْفُرْقَانِ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ وَمَنْ كَانَ مَرِيضًا أَوْ عَلَى سَفَرٍ فَعِدَّةٌ مِنْ أَيَّامٍ أُخَرَ يُرِيدُ اللَّهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللَّهَ عَلَى مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ

ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய)து என்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழி காட்டும் திருகுர்ஆன் (என்னும் வேதம்) இறக்கப்பட்டது. அது (நன்மை, தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடிய வசனங்களை உடையதாகவும் இருக்கிறது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கவும்.

ஆனால், (அக்காலத்தில் உங்களில்) யாராவது நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால் (ரமழான் அல்லாத) மற்ற நாள்களில் (விட்டுப்போன

நாள்களின் நோன்பைக்) கணக்கிட்டு (நோற்று) விடவும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவா(ன கட்டளையைக் கொடு)க்க விரும்புகிறான் தவிர சிரமத்தை(க் கொடுக்க) விரும்பவில்லை.

மேலும், (தவறிய நாள்களைக் கணக்கிடும்படி கட்டளையிட்டதெல்லாம், உங்கள்மீது கடமையாக உள்ள ஒரு மாத நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் முழுமை செய்வதற்காகவும்; (அவ்வாறே) அல்லாஹ் உங்களை நேரான பாதையில் நடத்தியதற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும்; (நோய், பிரயாணம் போன்ற சந்தர்ப்பங்களில் நோன்பு நோற்காதிருக்க உங்களுக்கு அனுமதி வழங்கியதற்காக) நீங்கள் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவதற்காகவுமே ஆகும்! (அல்குர்ஆன் 2 : 185)

**நோன்பு ஏன் கடமையாக்கப்பட்டது?**

பலர் யோசித்து இருக்கலாம். இந்த நோன்பை நாம் எப்படி எடுத்துக்கொள்வது? நோன்பு ஏன் கடமையாக்கப்பட்டது என்பதாக.

அல்லாஹ்வுடைய வேதம் இந்த மாதத்தில் தான் இறக்கப்பட்டது. இந்தக் குர்ஆன் தான் மனிதனை மாற்றக்கூடிய வேதம். குர்ஆனுடைய ஒவ்வொரு வசனமும் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்களை மாற்றியிருக்கிறது. பல காஃபிர்களை இஸ்லாமின் பக்கம் இழுத்து இருக்கிறது.

பல பாவிகளை தவ்பாவின் பக்கம் இழுத்து இருக்கிறது. மறுமையை மறந்து வாழ்ந்தவர்களுக்கு அவர்களுடைய இந்த உலக அற்ப இன்பங்களிலிருந்து அவர்களை வெளியேற்றி அவர்களை மறுமையின் பக்கம் கொண்டு வந்திருக்கிறது.

அல்லாஹ்வுடைய இந்த கலாம் ஒரு மலையின் மீது இறக்கப்பட்டு இருக்குமேயானால் அந்த மலையே அல்லாஹ்வின் அச்சத்தால் சுக்குநூறாகி ஆகியிருக்கும்.

لَوْ أَنْزَلْنَا هَذَا الْقُرْآنَ عَلَى جَبَلٍ لَرَأَيْتَهُ خَاشِعًا مُتَصَدِّعًا مِنْ خَشْيَةِ اللَّهِ وَتِلْكَ الْأَمْثَالُ نَضْرِبُهَا لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ

(நபியே!) ஒரு மலையின் மீது நாம் இந்த குர்ஆனை இறக்கிவைத்திருந்தால், அது அல்லாஹ்வின் பயத்தால் நடுங்கி வெடித்துப் பிளந்து போவதை நிச்சயமாக நீர் காண்பீர். மனிதர்கள் சிந்திப்பதற்காக இவ்வுதாரணங்களை நாம் கூறுகிறோம். (அல்குர்ஆன் 59 : 21)

அல்லாஹ்வுடைய அப்பேற்பட்ட அந்த கலாம் கிடைக்கப்பெற்ற நாம் இதன் மூலமாக எப்படி நம்மை மாற்றிக் கொள்வது? அதற்கு உண்டான பக்குவத்திற்கு தான் அல்லாஹு தஆலா நமக்கு நோன்பை கடமையாக்கினான்.

நோன்பு நம் மீது கடமையான ஹிக்மத்துகளில் ஒன்று, அந்த தக்வாவுடைய வாழ்க்கை. குர்ஆனின் இறையச்சத்தின் வாழ்க்கை நமக்கு வரவேண்டும்.

தக்வாவின் அந்த சிஃபத் இல்லையென்றால் ஒரு மனிதன் குர்ஆனை பின்பற்ற முடியாது. குர்ஆன் அவனிலே நல்ல மாற்றங்களை ஏற்படுத்தாது.

இந்தத் தக்வா நம்மிடத்திலே வருவதற்குத்தான் அல்லாஹு தஆலா நோன்பை நம்மீது கடமையாக்கினான். நம்முடைய நஃப்சை பசியை கொண்டு, தாகத்தைக் கொண்டு, நம்முடைய உடல் இச்சையை அடக்குவதை கொண்டு, இந்த நஃப்சுக்கு நாம் ஒரு பயிற்சி கொடுக்கும் போது இந்த நஃப்ஸ் பணிந்ததாக பயந்ததாக அல்லாஹ்விற்கு முன்னால் கட்டுப்பட வேண்டும் என்ற உணர்வுள்ளதாக ஆகிறது.

ஆகவேதான் இந்த ரமழானுடைய நோன்பை அல்லாஹு தஆலா எந்த அளவு நேசிக்கின்றான் என்றால் அடியானை அல்லாஹ்விற்கு பணியவைக்கக்கூடியதாக, கட்டுப்படுத்தக்கூடியதாக, மற்ற இபாதத்துக்களுக்கு ஒரு துணையாக, மற்ற இபாதத்துகளின் பக்கம் முந்தக்கூடியதாக, ஒரு சக்தியாக இந்த நோன்பு இருக்கின்ற காரணத்தால் தான் ஹதீஸ் குத்ஸியிலே அல்லாஹு தஆலா கூறுவதை நாம் பார்க்கின்றோம்.

அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்;

أَنَّهُ سَمِعَ أَبَا هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ، قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: قَالَ اللهُ عَزَّ وَجَلَّ: كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ لَهُ، إِلَّا الصِّيَامَ، هُوَ لِي وَأَنَا أَجْزِي بِهِ (صحيح مسلم 1151)

ஆதமுடைய மனிதர்கள் செய்யக்கூடிய அமல்கலெல்லாம் அது அவர்களுக்கு. -அதாவது அந்த அமல்களை அவர்களுக்குரிய அமலாக அவர்கள் தங்களுடைய நன்மைக்காக செய்யக்கூடிய அமல்களாக நான் பார்க்கின்றேன்-. நோன்பைத் தவிர. இந்த நோன்பு எனக்காக உள்ளது.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 1151.

எல்லா அமல்களையும் நாம் அல்லாஹ்விற்காக தான் செய்கின்றோம்.

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

நீங்கள் கூறுங்கள்: ''நிச்சயமாக என் தொழுகையும், என் (மற்ற) வணக்கங்களும், என் வாழ்வும், என் மரணமும் உலகத்தாரை படைத்து வளர்த்து பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை. (அல்குர் ஆன் 6 : 162)

நாம் தொழும் போது மனதிலே, அல்லாஹ் நான் உனக்காக தொழுகின்றேன் என்ற எண்ணத்தில் தான் தொழுகின்றோம். ஹஜ் செய்யும்போது, உம்ரா செய்யும் போது தர்மங்கள் கொடுக்கும் போது எல்லாம் அல்லாஹ்வுக்காகத் தான்.

ஆனால் சகோதரர்களே! அந்த எல்லா அமல்களும் அல்லாஹ்விற்காக செய்யப்பட்ட அமலாக இருக்கின்ற நேரத்தில் இந்த ரமழானுடைய நோன்பை தனக்குரிய நோன்பாக, விசேஷமாக, பெருமையாக, கண்ணியமாக, உயர்வாக அல்லாஹ் கூறுகின்றான் என்றால் ரப்பு கூறுவதைப் பாருங்கள்

அல்லாஹ் என்ன கூறுகின்றான்? இந்த நோன்பு எனக்குரியது. இந்த நோன்புக்குரிய கூலியை நான் கொடுப்பேன் என்பதாக.

மற்றுமொரு அறிவிப்பில் பார்க்கின்றோம்.

يَدَعُ شَهْوَتَهُ وَطَعَامَهُ مِنْ أَجْلِي

அவனுடைய உணவையும், அவனுடைய குடிபானத்தையும் அவன் எனக்காக விட்டு விடுகின்றான். இந்த நோன்பு எனக்குரியது. நான் இதற்குரிய கூலியை தருவேன் என்பதாக.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 1151.

சகோதரர்களே! இந்த ரமழான் அவ்வளவு உயர்ந்த ஒரு பாக்கியமிக்க மாதம் இதை கிடைக்கப்பெற்றதற்கு நாம் செலுத்தக்கூடிய நன்றி என்னவென்றால் இந்த ரமழானை அல்லாஹ்வின் பொருத்தமான வழிகளில் நாம் கழிக்கவேண்டும். நேரங்களை கழிப்பதற்கு நாம் ஒரு பெரிய சிரமம் எடுக்க வேண்டிய அவசியமில்லை.

அப்படியே தூங்கி கொண்டு இருந்தாலும் நேரம் கழிந்து விடும். தேவையற்ற விஷயங்களை பேச ஆரம்பித்தாலே மணிக்கணக்கான நேரங்கள் கழிந்து விடும். ஆனால், அவற்றில் இருந்து எல்லாம் நம்மைப் பாதுகாத்து நாம் அல்லாஹ்வுடைய வணக்க வழிபாட்டிலே நம்மை ஈடுபடுத்த வேண்டும் என்றால் அதற்கு நாம் ஒரு முயற்சி நம்முடைய நஃப்சை நாம் கட்டுப்படுத்த வேண்டும்.

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆகவே தான் ரமழான் வருவதற்கு முன்பாகவே ரமழான் நெருங்கிவிடும் போதே தங்களுடைய தோழர்களை ரமழானுக்கு தயாராகும்படி ரமழானிலே உங்களை அமல்களோடு ஈடுபடுத்தி வைக்க வேண்டும் என்பதற்காக அதற்குரிய அறிவுரைகளை முன்னுரைகளை வழங்கக்கூடியவர்களாக இருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ரமழான் வருவதற்கு முன்பாக அவர்கள் செய்கின்ற உபதேசங்களை நாம் பார்க்கின்றோம்.

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «أَتَاكُمْ رَمَضَانُ شَهْرٌ مُبَارَكٌ فَرَضَ اللَّهُ عَزَّ وَجَلَّ عَلَيْكُمْ صِيَامَهُ، تُفْتَحُ فِيهِ أَبْوَابُ السَّمَاءِ، وَتُغْلَقُ فِيهِ أَبْوَابُ الْجَحِيمِ، وَتُغَلُّ فِيهِ مَرَدَةُ الشَّيَاطِينِ، لِلَّهِ فِيهِ لَيْلَةٌ خَيْرٌ مِنْ أَلْفِ شَهْرٍ، مَنْ حُرِمَ خَيْرَهَا فَقَدْ حُرِمَ«

(سنن النسائي- 2106)حكم الألباني- صحيح

நபி (ஸல்) அவர்கள் சொல்வார்கள்; இதோ ரமழானுடைய மாதம் உங்களுக்கு வரப்போகின்றது. இந்த ரமழானுடைய மாதத்தில் பகலில் நோன்பு வைப்பதை அல்லாஹ் உங்கள் மீது கடமையாக்கினான். சொர்க்கத்தின் வாசல்கள் வானத்தின் வாசல்கள் இந்த ரமலானில் திறக்கப்பட போகின்றது. நரகத்தின் கதவுகள் அடைக்கப்பட போகின்றன.ஷைத்தான்களுக்கு விலங்குகள் போடப்படுகின்றன.இதிலே ஒரு இரவு இருக்கின்றது ஆயிரம் மாதங்களை விட சிறந்தது இதன் நன்மைகளை இழந்தவர் தான் முற்றிலும் இழப்பிற்குரியவர் ஆவார்.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : நசாயி, எண் : 2106, தரம் : ஸஹீஹ் (அல்பானி)

சகோதரர்களே! கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! யோசித்துப் பாருங்கள்! நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்களுடைய தோழர்களுக்கு எப்போதுமே இபாதத்தில் இருந்தவர்கள். அல்லாஹ்வை மறக்காதவர்கள். ஐந்து நேரத் தொழுகைகளில் கவனமாக இருந்தவர்கள். பிறகு நஃபிலான நோன்புகளில் கவனமாக இருந்தவர்கள். சஹாபாக்களுடைய வாழ்க்கையில் எந்த அமல்களில் அவர்கள் அலட்சியம் செய்பவர்களாக இருந்தார்கள் என்று நாம் சொல்ல முடியுமா?

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்படி தங்களுடைய தோழர்களை ஆஹிரத்திற்காக தயார்படுத்தி வைத்திருந்தார்கள். நாளை ஆஹிரத் என்றால் இன்றோடு உலகம் முடியப் போகின்றது நாளை மறுமை நாள் நிகழப் போகிறது என்று இருக்குமேயானால் அப்பொழுது கூட அதிகப்படியான ஒரு அமலை செய்வதற்கான நேரம் அவர்களிடத்தில் இல்லை. அந்த அளவிற்கு நேரங்களை அமல்களை கொண்டு அவர்கள் ஈடுபடுத்தி வைத்திருந்தார்கள்.

நம்மை பொருத்தவரை, உதாரணத்திற்கு, இன்று நம்மில் யாருக்காவது இன்று மாலையோடு நீ மௌத்தாகிவிடுவாய் என்று சொல்லப்பட்டுவிட்டால் நம்முடைய நிலைமை எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். இப்படி உணர்த்தப்பட்டால் தான் நமக்கு மரணம் வருமோ யோசித்துப் பாருங்கள். அப்படி இல்லையென்றால் மரணம் வராதா?

விதிக்கப்பட்ட ஒன்று எழுதப்பட்ட ஒன்று. அடுத்த ரமழான் வரை நாம் இருப்பதை யார் நமக்கு உறுதி கொடுக்க முடியும்? மரணம் நம்மை தேடிக்கொண்டே இருக்கின்றது.

பயணத்திலும் சரி, உள்ளூரிலும் சரி, தனிமையிலும் சரி, சபையிலும் சரி, எல்லா நேரங்களிலும் அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்களுடைய தோழர்களுக்கு இப்பேற்பட்ட ஒரு உணர்வை கொண்டு வர முயற்சித்தார்கள். இபாதத்துகளில் இருந்தவர்கள், ஜிஹாதிலிருந்து மற்ற நஃபிலான வணக்கங்களில் இருந்து என்னென்ன தியாகங்களில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்!

உலக வாழ்க்கையில் அவர்கள் ஈடுபட்டது அவர்களுடைய அந்த ஹலாலான, அவசியமான ஹாஜத்துகளை சீர் செய்வதற்குரிய அளவுதான் என்று சொல்லலாம். அப்படிப்பட்ட தோழர்களுக்கே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமழானை குறித்து முன்னறிவிப்பு செய்து அந்த ரமழான் வரப்போகிறது. அந்த ரமழானுடைய பகலிலே நோன்பு வைப்பதை அல்லாஹ் கடமையாக்கி இருக்கின்றான். சொர்க்கத்தின் கதவுகள் உங்களுக்காக திறக்கப்படுகின்றன என்று கூறினார்களே அந்த சொர்க்கத்திற்கு நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? அந்தச் சொர்க்கத்தை பெறுவதற்காக நீங்கள் என்ன அமல்களை அதிகமாக செய்யப் போகின்றீர்கள்?

இங்கே நமக்கும் அந்த தோழர்களுக்குமிடையே உண்டான வித்தியாசம் என்ன தெரியுமா? நாம் நம்மை பொருத்தவரை எப்படி விளங்கி வைத்திருக்கின்றோம் என்றால் அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக! அல்லாஹ் நம் மீது அருள் புரிவானாக!

இன்று நம்மிலே ஒவ்வொருவரும் நமக்கு சொர்க்கத்தின் அந்த உறுதிமானம் கையிலே கொடுக்கப்பட்டதை போன்ற எண்ணத்தில் இருக்கின்றோம். நம்முடைய உள்ளத்திலே பயம் குறைந்து விட்டது. ஆதரவு இருக்க வேண்டும். ஆனால் அந்த ஆதரவு துணிவாக மாறிவிட்டது. அந்த ஆதரவு ஒரு பெருமையாக மாறிவிட்டது. இந்த ஆதரவு நம்மை அலட்சியத்திலே தள்ளக்கூடிய அளவிற்கு வந்துவிட்டது. அந்த ஆதரவு நமக்கு அமல்களிலே சோம்பலை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு வந்துவிட்டது. அந்த ஆதரவு நம்மை பாவத்திலிருந்து தடுக்காமல் பாவத்தில் ஈடுபடக்கூடிய ஒரு காரணமாக மாறி இருக்கின்றது. அல்லாஹ் பாதுகாப்பானாக!

உண்மையில் ஆதரவின் அர்த்தம் என்னவென்றால் யார் ஒருவர் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தை, அல்லாஹ்வுடைய சொர்க்கத்தை ஆதரவு வைப்பாரோ அவர் அதிகமாக அமல்களில் ஈடுபடுவார். அந்த சொர்க்கத்தின் உயர்ந்த பதவிகளை அடைவதற்கு அதிகம் ஆசை கொண்டவராக அதிகம் முயற்சி உடையவராக இருப்பார். அது தான் ஆதரவுக்கு உண்டான அடையாளம்.

ஒரு மனிதன் ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை செய்கின்றான். அந்த நிறுவனத்தில் யாருக்கும் கொடுக்கப்படாத மிகப்பெரிய சம்பளம் அவனுக்கு கொடுக்கப்படுகின்றது என்றால் அந்த மனிதன் அந்த நிறுவனத்தில் எப்படி வேலை செய்வான்? எல்லோரை விட எனக்குத்தான் அதிகமான பொறுப்பு, எனக்குத்தான் உயர்ந்த சம்பளம், எனக்குத்தான் மிக பெரிய கண்ணியம் என்று இருக்கும்போது அந்த அடியான் அந்த ஆதரவினால் அந்த

நிறுவனத்தில் பொறுப்பை சரியாக முழுமையாக நிறைவேற்றுவானா?இல்லை அலட்சியம் செய்து கொண்டிருப்பானா?அப்படி அலட்சியம் செய்வானேயானால் எதை அவன் ஆதரவு வைத்தானோ அவன் அதை இழக்க வேண்டிய நிலைக்கு வந்துவிடும்.

எதை ஆதரவு வைத்தானோ அதை இழக்க வேண்டிய நிலைக்கு வந்து விடுவான். ஒரு கண்ணியமானவனுடைய கண்ணியம் அவன் அந்த கண்ணியத்திற்கு ஏற்ப நடந்து கொள்ளும் போது தான்.

ஒரு மதிப்புமிக்கவனுடைய மதிப்பு அந்த மதிப்பிற்கு ஏற்ப அவன் நடந்து கொள்ளும் போதுதான். தனக்கு மதிப்பு இருக்கிறது என்பதற்காக, தனக்கு கண்ணியம் இருக்கிறது என்பதற்காக கண்ணியத்திற்கும் மதிப்பிற்கும் உண்டான இலக்கணங்களை அவன் உடைக்க ஆரம்பித்தால் அவன் எந்த மதிப்பை சந்தித்தானோ அதுபோன்ற இழிவை கேவலத்தை அவமானத்தை அவன் சந்திக்கவேண்டும். அல்லாஹ் பாதுகாக்கவேண்டும்!

இந்த ரமழானில் நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதும் சொர்க்கத்தையும் நான் ஆதரவு வைப்பவர்களாக இருந்தால் அந்த சொர்க்கத்தை தேடி அமல் செய்ய வேண்டும். அந்த சொர்க்கத்திற்கு ஆர்வப்படவேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் என்ன சொன்னார்கள்; வானத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன. (நசாயி எண் : 2106)

அல்லாஹுﷻ தஆலா சொர்க்கத்தை திறந்து வைத்து விட்டான். வாருங்கள் நீங்கள் எவ்வளவு அமல்கள் செய்கிறீர்களோ உங்களுக்கு அங்கே சொர்க்கம் காத்துக்கொண்டிருக்கிறது என்பதாக.

அதுபோன்று நரகத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டுவிடுகின்றன. ஷைத்தான்களுக்கு விலங்கிடப்பட்டு விடுகின்றன.

அன்பு சகோதரர்களே! இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். ஷைத்தான்களுக்கு விலங்கிடப்பட்டு விடுகின்றன. ஜின்களில் உள்ள அந்த ஷைத்தான்களுக்கு விலங்கிடப்பட்டு விடுகின்றன.

ஆனால், மனிதர்களில் சிலர் ஷைத்தான்கள் புறப்பட்டு விடுகின்றார்கள். அந்த ஜின்களின் ஷைத்தான்களுடைய வேலை இல்லாதபோது மனிதர்களில் உள்ள சில ஷைத்தான்கள் புறப்பட்டுவிடுகின்றார்கள் மக்களை வழி கெடுப்பதற்காக. அல்லாஹுﷻ தஆலா அவர்களிலிருந்தும் நம்மை பாதுகாப்பானாக.

இந்த ரமழானுக்காக நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் எடுத்த அந்த முயற்சியை பாருங்கள். எதற்காக எடுத்தார்கள்? இபாதத்துக்காக. அந்த இபாததிற்காகத்தான் நாம் இந்த உலகத்தில் படைக்கப்பட்டு இருக்கின்றோம்.

அல்லாஹ் கூறுகின்றான்;

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ

ஜின்களும் மனிதர்களும் என்னை வணங்குவதற்காகவே தவிர நான் அவர்களை படைக்கவில்லை என்று அல்லாஹ் கூறுகின்றான். (அல்குர்ஆன் 51 : 56)

நம்முடைய வியாபாரம், தொழில், மனைவி, மக்கள், குடும்பம், நம்முடைய இந்த உலக மகிழ்ச்சி இவைகள் எல்லாம் நம்முடைய இந்த உலகத்தோடு முடிந்து விடக் கூடியவைகள்.

الْمَالُ وَالْبَنُونَ زِينَةُ الْحَيَاةِ الدُّنْيَا وَالْبَاقِيَاتُ الصَّالِحَاتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَخَيْرٌ أَمَلًا

(ஆகவே,) செல்வமும் ஆண் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே (தவிர நிலையானவையல்ல). என்றுமே நிலையான நற்செயல்கள்தான் உமது இறைவனிடத்தில் நற்கூலி கிடைப்பதற்கு மிக சிறந்ததும், நல்லாதரவு வைப்பதற்கு மிக சிறந்ததும் ஆகும். (அல்குர்ஆன் 18 : 46)

நாம் கட்டிய வீடுகள் அழிந்துவிடும். நம்முடைய மனைவி நம்மை விட்டு பிரிந்து விடுவாள். நம்முடைய பிள்ளைகள், நாம் சேகரித்த செல்வம், ஆசையாக தேடிய உலகம் எல்லாம் நம்மை விட்டு சென்று விடும்.

உங்களோடு நிரந்தரமாக இருக்கக்கூடியவை. கப்ரில் நிரந்தரமாக உங்களோடு தங்க கூடியவை, மஹ்ஷரில் உங்களுக்கு கை கொடுக்கக் கூடியவை நல்லமல்கள் மட்டும் தான்.

மனைவி நம்மை கைவிட்டாலும், நம்முடைய பெற்றோர்கள் நம்மை கைவிட்டாலும், நம்முடைய பிள்ளைகள் நண்பர்கள் எல்லோரும் நம்மை விட்டு ஓடிவிட்டாலும் நாம் செய்த அமல் நமக்கு அல்லாஹ்விடத்தில் சிபாரிசு செய்து கொண்டிருக்கும்.

يَوْمَ يَفِرُّ الْمَرْءُ مِنْ أَخِيهِ (34) وَأُمِّهِ وَأَبِيهِ (35) وَصَاحِبَتِهِ وَبَنِيهِ (36) لِكُلِّ امْرِئٍ مِنْهُمْ يَوْمَئِذٍ شَأْنٌ يُغْنِيهِ

அந்நாளில் மனிதன் தன் சகோதரனை விட்டும் வெருண்டோடுவான், தன் தாயை விட்டும், தன் தந்தையை விட்டும், தன் மனைவியை விட்டும், தன் பிள்ளைகளை விட்டும் (ஓடுவான்). அந்நாளில், அவர்களில் ஒவ்வொரு மனிதனுக்கும், மற்றவர்களைக் கவனிக்க முடியாதவாறு சொந்தக் கவலை ஏற்பட்டுவிடும். (அல்குர்ஆன் 80 : 34-37)

அவனுடைய பிரச்சனை பிறருடைய பிரச்சினையை எட்டிப் பார்ப்பதை விட்டும் அவனை திருப்பி விடும் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அந்த நேரத்தில் ரமழானுடைய நோன்பு அல்லாஹ் விடத்தில் சிபாரிசு செய்யும்.

رَبِّ إِنِّي مَنَعْتُهُ الطَّعَامَ وَالشَّهَوَاتِ

என் இறைவா! உனக்காக நான் இவனை உணவை விட்டும், குடி பானத்தை விட்டும், தேவைகளை விட்டும் தடுத்து வைத்திருந்தேன். எனவே நான் செய்யக்கூடிய சிபாரிசை நீ ஏற்றுக்கொள். (1)

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம் எண் : 1972.

இவருக்காக நாளை மறுமையிலே இந்த நோன்பு அல்லாஹ்விடத்திலே சிபாரிசு செய்யும் அல்லாஹ்வே இந்த அடியானை மன்னிப்பாயாக! நரகத்திலிருந்து பாதுகாப்பாயாக! என்று.

ஆகவே தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோன்பை பற்றி சொல்லும்போது,

عَنْ مُعَاذِ بْنِ جَبَلٍ، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «الصَّوْمُ جُنَّةٌ« (سنن النسائي2224) حكم الألباني– صحيح

நோன்பு மனிதனை நரக நெருப்பிலிருந்து அடியானை தடுக்கக்கூடிய கேடயம் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : சுனன் குப்ரா நசாயி, எண் : 2224, தரம் : ஸஹீஹ் (சரியானது)

மனிதனை நரக நெருப்பிலிருந்து பாதுகாக்கக்கூடிய கேடயம். கேடயம் எப்படி போரில் போர் வீரனை எதிரிகளின் அந்த வால் வீச்சிலிருந்து தாக்குதலிலிருந்து பாதுகாக்கின்றதோ அதுபோன்று இந்த நோன்பு அடியானை நரக நெருப்பிலிருந்து பாதுகாக்கக் கூடியது.

எனவே நோன்பு சொல்லும்; அல்லாஹ்வே! இந்த அடியானை உணவை விட்டும், தாகத்தின் போது நீரை விட்டும் நான் இவனை தடுத்து வைத்திருந்திருந்தேன். எனக்கு நீ சிபாரிசு செய். சிபாரிசு கொடுக்க வேண்டும் அந்த சிபாரிசை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று.

அடுத்ததாக குர்ஆன், யா அல்லாஹ்! இரவு நேரங்களில் நான் இவனை தூக்கத்திலிருந்து தடுத்து வைத்திருந்தேன். -அது நீங்கள் குர்ஆனை ஓதிக் கொண்டு இருந்தாலும் சரி, அல்லது மஸ்ஜிதில் ஓதப்படக்கூடிய அந்த குர்ஆனை தொழுகையில் கேட்டுக்கொண்டு இருந்தாலும் சரி-

யா அல்லாஹ் இந்த அடியானை நான் தூக்கத்திலிருந்து தடுத்து வைத்திருந்தேன். எனவே என்னுடைய சிபாரிசை நீ ஏற்றுக் கொள்வாயாக என்று சிபாரிசு செய்யும்.

அல்லாஹு தஆலா அந்த நோன்புடைய சிபாரிசையையும் அந்த குர்ஆனுடைய சிபாரிசையையும் ஏற்றுக் கொண்டு அடியானை மன்னித்து சொர்க்கத்திற்கு அனுப்புவான்.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம் எண் : 1972.

எப்பேற்ப்பட்ட பாக்கியம் சகோதரர்களே! அல்லாஹ்வுடைய அந்த குர்ஆன் அடியானுக்காக சிபாரிசு செய்கிறது. அந்த அடியான் மன்னிக்கப்படுகின்ற வரை. அந்த அடியான் சொர்க்கத்திற்கு செல்கின்ற வரை.

இதைத்தான் அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இன்னும் அழுத்தமாக நமக்கு சொன்னார்கள்;

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «مَنْ صَامَ رَمَضَانَ، إِيمَانًا وَاحْتِسَابًا، غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ» (صحيح البخاري – 38)

யார் இந்த ரமழானுடைய மாதத்தில் நன்மைகளை எதிர்பார்த்தவராக ஆஹிரத்துக்காக மறுமைக்காக ஈமானுடன் நோன்பு நோற்பார்களோ அவர்களுடைய முந்திய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு விடுகின்றன.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 38, முஸ்லிம், எண் : 760.

அல்லாஹு தஆலா அவர்களுடைய பாவங்களை எல்லாம் மன்னித்து விடுகின்றான். பாவங்கள் மன்னிக்கப்பட்ட ஒரு தூய்மையான மனிதராக அவர் ஆகி விடுகின்றார்.

அன்பிற்குரிய சகோதரர்களே! ஒன்று இந்த ரமழானுடைய மாதத்தில் வணக்க வழிபாடுகளை கொண்டு நம்முடைய நேரங்களை நிரப்ப வேண்டும். முதலாவதாக ஃபர்ளான தொழுகைகள், பிறகு சுன்னத்தான தொழுகைகள், பிறகு நஃபிலான தொழுகைகள், பிறகு குர்ஆன் ஓதுவது, தர்மங்கள் செய்வது, சிறிது நேரம் தனிமையிலே அமர்ந்து அல்லாஹ்விடத்தில் பேசுவது, திக்ரு செய்வது, அல்லாஹ்விடத்தில் துஆ மூலமாக தன்னைப்பற்றி அல்லாஹ்விடத்தில் கூறுவது, தன்னுடைய ரப்பிடத்தில் கூறுவது, அடியான் மார்க்க ரீதியான குறைகளை அல்லாஹ்விடத்தில் கூறுவது.

அல்லாஹ் கடமையாக்கிய கடமைகளில் எத்தனை கடமைகளை நான் பாழாக்கி விட்டேன்!

பாவங்களில் எத்தனை பாவங்கள் செய்து விட்டேன்! எத்தனை கெட்ட குணங்கள் என்னிடம் இருக்கின்றன! எத்தனை நல்ல குணங்கள் என்னிடம் இல்லாமல் இருக்கின்றன!

இவற்றையெல்லாம் அல்லாஹ்விடத்தில் கூறி, தன்னுடைய பலவீனத்தை கூறி, தன்னுடைய இயலாமையை கூறி, யா அல்லாஹ்! எனக்கு நீ இதை சீர் செய்து தருவாயா!க யா அல்லாஹ்! எண்ணத்தில் இருக்கக்கூடிய இந்த பலவீனத்தை போக்குவாயாக! ஒவ்வொரு அமல்களிலும் நாம் செய்த அலட்சியத்தை அல்லாஹ்விடம் கூறி அந்த அமல்களில் முழுமையை நாம் கேட்பது.

ஒரு மனிதன் தன் கையில் நிறைய செல்வம் பொற்காசுகள் பணங்களை வைத்திருப்பதாக எண்ணுகின்றான். ஆனால் ஒரு நேரம் வரும் போது தான் அவனுக்கு தெரிகின்றது; அந்தக் காசை அந்த செல்வத்தை அவன் பயன்படுத்துவதற்காக கடைவீதிக்கு எடுத்து செல்லும் போது தான் தெரிகின்றது;

அவன் வைத்திருக்கக்கூடிய அந்த பணம் காசு செல்லாத காசு என்று, அல்லது காலாவதி ஆகிவிட்ட ஒன்று என்று, அல்லது அதில் பல குறைபாடுகள் இருக்கின்றன; அவன் எதிர்பார்த்த மதிப்பு அந்த செல்வத்திற்கு, அந்தப் பணத்திற்கு, நாணயத்திற்கு இது கிடைக்காது என்று ஒரு மனிதன் அறிய வருவானேயானால் அவனுடைய உள்ளம் எவ்வளவு பெரிய துக்கத்திற்கு சஞ்சலத்திற்கு ஆளாகும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

தன்னை பெரிய செல்வந்தனாக நினைத்துக் கொண்டிருந்தான்; அல்லது ஒரு பெரிய கனமான தங்க கட்டியை வைத்து இருப்பதாக எண்ணுகின்றான். ஆனால் அந்த தங்ககட்டியை எடுத்துக்கொண்டு அவன் ஒரு பொற்கொல்லனிடம் செல்லும் போது தான் தெரிகின்றது; அது தங்ககட்டி அல்ல. அது சாதாரண ஒரு உலோகம் என்பதாக.

அந்தக் தங்கக்கட்டியை வைத்துக்கொண்டு எப்படியெல்லாம் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றலாம்? எப்படிப்பட்ட செல்வந்தனாக ஆகலாம்? என்று அவன் திட்டம் போட்டு வைத்திருப்பான். எவ்வளவு பெரிய மன கோட்டைகளை அவன் கட்டி வைத்திருப்பான். அது ஒன்றுமில்லாத மதிப்பில்லாத ஒன்று என்று தெரியவரும்போது அவனுடைய உள்ளத்தில் ஏற்படக்கூடிய சஞ்சலம் மனவருத்தம் எப்படி இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக! நம்மில் எத்தனைபேருக்கு மறுமையில் இந்த நிலைமை வந்துவிடுமோ! அவர்களில் ஒருவனாக நான் இருந்தால் என்ன ஆகும் நிலைமை? அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். அமல்களை கொண்டு செல்கின்றோம்; நோன்பு, வணக்க வழிபாடுகளை கொண்டு செல்கின்றோம்; அங்கு நாம் செல்லும்போது இது எதுவுமே செல்லாது என்று அல்லாஹ் கூறிவிட்டால்.

இக்லாஸில் ஓட்டை, அல்லது ஷர்த்துகளில் ஓட்டை, அல்லது வாஜிபுகளில் ஓட்டை, அல்லது நிறைவேற்றிய அந்த தன்மைகளில் ஓட்டை. இப்படியாக ஓட்டைகளாக இருந்து அது

செல்லாது ஒன்றாக ஆகிவிடுமேயானால் அந்த நாளில் தான் தெரியவரும். இப்போது தெரிய வராது. ஆஹிரத்தில் தெரியவரும்போது அதை சீர் செய்வதற்கோ, நிவர்த்தி செய்வதற்கோ நமக்கு அவகாசம் இருக்காது.

فَرِيقٌ فِي الْجَنَّةِ وَفَرِيقٌ فِي السَّعِيرِ

சொர்க்கத்திற்கு ஒரு கூட்டம் நரகத்திற்கு ஒரு கூட்டம் என்று பிரிக்கப்படும்போது, (அல்குர்ஆன் 42 : 7)

وَامْتَازُوا الْيَوْمَ أَيُّهَا الْمُجْرِمُونَ

பாவிகளே! பிரிந்து விடுங்கள் என்று சொல்லப்படக்கூடிய அந்த நாளில்! (அல்குர்ஆன் 36 : 59)

நமக்கு தெரிய வந்தால் எப்பேற்ப்பட்ட கைசேதமாக இருக்கும்? அல்லாஹ் அந்தத் கை சேதத்திலிருந்து நம்மை பாதுகாப்பானாக!

சகோதரர்களே! நம்முடைய அமல்களில் உள்ள குறைகளை அல்லாஹ்விடத்தில் சொல்லி யா அல்லாஹ்! முழுமையான அமல்களை செய்வதற்கு எனக்கு தவ்ஃபீக் தா!

வாழ்க்கையில் இரண்டு ரக்அத்துகள் அல்லாஹ்வைத் தவிர வேறு எதையும் நினைக்காமல், வேறு எந்த நினைவும் வராமல் இருப்பதற்குண்டான பயிற்சி நம்மிடத்தில் இருக்கின்றதா?

அதுபோன்று எந்தவிதமான பாவத்தின் எண்ணங்களை உள்ளத்தில் கொண்டுவராமல் கண்களைப் பாதுகாத்து, செவிகளைப் பாதுகாத்து, வணக்க வழிபாடுகளை நம்மை ஈடுபடுத்தி ஒரு நோன்பு நம்மால் முழுமையாக கொண்டு வர முடியுமா? என்று அந்த ஒரு பயிற்சி அதற்காக அல்லாஹ்விடத்தில் கேட்கவேண்டும்.

எப்படி துன்யாவை கேட்கின்றோமா இல்லையா? நம்முடைய உலக தேவைகளை கேட்கின்றோமா இல்லையா? எது நம்முடைய பெரிய தேவை? உலகத் தேவையா? அல்லது மறுமையின் தேவையா?

தொழுகை தானே மறுமையில் சிபாரிசு செய்யும். அது தான் சொர்க்கத்தின் திறவுகோல். நோன்பு தானே நரகத்திலிருந்து நம்மை பாதுகாக்கக்கூடிய கேடயம். ஏன் அதனுடைய முழுமையை அல்லாஹ்விடத்தில் கேட்பதில்லை?

யா அல்லாஹ், என்னை ஒரு சரியான உள்ளச்சமுள்ள தொழுகையாளியாக ஆக்கி வை!

قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ (1) الَّذِينَ هُمْ فِي صَلَاتِهِمْ خَاشِعُونَ

நம்பிக்கையாளர்கள் நிச்சயமாக வெற்றி அடைந்து விட்டனர். அவர்கள் மிக்க உள்ளச்சத்தோடு தொழுவார்கள். (அல்குர்ஆன் 23 : 1-2)

யா அல்லாஹ்! பயபக்தியுள்ள, தக்வா உள்ள, உள்ளச்சமுள்ள தொழுகையாளியாக என்னை ஆக்கு! தொழுகையில் அதிகம் நிற்பதற்கு எனக்கு அருளை கொடு! அதிகம் கவனம் செலுத்துவதற்கு எனக்கு அருளை கொடு! இப்படியாக ஒவ்வொரு வணக்க வழிபாட்டிலும் நமக்கு இருக்கக்கூடிய பலவீனத்தை அல்லாஹ்விற்கு முன்னால் கூறவேண்டும்.

யா அல்லாஹ்! நல்லோர்கள் எப்படி உன்னை வணங்கினார்களோ, உன்னுடைய வணக்க வழிபாட்டில் கவனம் உள்ளவர்களாக இருந்தார்களோ அது போன்ற மனஓர்மையை, மனக்கட்டுப்பாட்டை, மனவலிமையை எனக்கு கொடு! என்று அல்லாஹ்விடத்தில் கேட்க வேண்டும்.

இன்னொரு பக்கம் பாவங்களைக் கொண்டு, வீணான காரியங்களைக் கொண்டு, அல்லாஹ்வை கோபப்படுத்தக் கூடிய செயல்களைக் கொண்டு நம்முடைய நோன்பைப் பாழாக்கி விடாமல் இருக்க வேண்டும்.

ஒரு பக்கம் அமல்களில் கவனம் இருக்கும் அதே நேரத்தில் இன்னொரு பக்கம் அமல்களின் நன்மைகளை அழித்துவிடக் கூடிய பாவங்களை விட்டும் தவிர்ந்திருப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். அதில் கவனம் இல்லையென்றால் ஒரு பக்கம் நன்மை சேர பிறகு பாவங்கள் அந்த நன்மையை அழித்துவிடக் கூடிய நஷ்டத்தில் நம்மை கொண்டு போய் சேர்த்துவிடும்.

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் இதைத்தான் மிக அழுத்தமாக சொன்னார்கள்;

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «مَنْ لَمْ يَدَعْ قَوْلَ الزُّورِ وَالعَمَلَ بِهِ، فَلَيْسَ لِلَّهِ حَاجَةٌ فِي أَنْ يَدَعَ طَعَامَهُ وَشَرَابَهُ» (صحيح البخاري - 1903)

யார் பாவமான செயல்களை செய்வதை விட வில்லையோ, பாவமான பேச்சுகளை பேசுவதை விடவில்லையோ அவர் தன்னுடைய உணவை விட்டு இருப்பதிலோ, தன்னுடைய குடி பானத்தை விட்டு இருப்பதிலோ, தன்னுடைய ஆசையை விட்டு இருப்பதிலோ அல்லாஹ்விற்கு எந்தத் தேவையுமில்லை; எந்த நன்மையும் இல்லை.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 1903.

இன்று பெரும்பாலும் சூழ்நிலை அல்ஹம்துலில்லாஹ் மாறி இருக்கின்றது. இருந்தாலும் பல இடங்களில் அல்லாஹு தஆலா உடைய தண்டனைக்குரிய காரியங்களில் தான் நோன்பாளிகள் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

குறிப்பாக இரவு நேரங்களில் தங்களுடைய வாகனங்களில் சுற்றி வருவது; சிலர் வீண் விளையாட்டுகளில் ஈடுபடுவது; சினிமாக்கள் பார்ப்பது; அது போன்று பகல் நேரங்களில் தேவையில்லாத விஷயங்களை பார்த்துக்கொண்டு நேரத்தைக் கடத்துவது; பொழுது போக்குவதற்காக

ரமழானுடைய மாதங்களில் ரமழானுடைய இரவுகளில் நேரங்களை கடத்த வேண்டும் என்பதற்காக பலர் பலவிதமான இந்த டிவியில் வரக்கூடிய தொடர்களில் மற்ற காரியங்களில் நேரங்களை வீணடிப்பதை ஓர் அளவுக்கு குறைத்து விட்டாலும் கூட இன்றும் அது பலரிடத்தில் காணப்படக் கூடிய ஒரு நோயாகத்தான் இருக்கின்றது.

அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்! அவர்களைப் பொறுத்தவரை சஹருக்காக விழித்து இருப்பார்கள். சஹர் செய்தவுடன் தொழாமல் தூங்கி விடுவார்கள்.

பிறகு நோன்புடைய நேரங்களில் தூங்கிக் கொண்டும் அலட்சியமாக இருப்பார்கள். பிறகு இஃப்தாருக்காக உஷாராவார்கள். இப்படிப்பட்ட ஒரு நோய் பரவலாக குறிப்பாக வாலிப ஆண்களிடத்திலும் வாலிபப் பெண்களிடத்திலும் இருப்பதை நாம் பார்க்கின்றோம்.

நம்முடைய குடும்பத்திலுள்ள நம்முடைய நட்பிலுள்ள நம்முடைய இந்த வாலிப சமுதாயத்திற்கு நாம் கண்டிப்பாக உணர்த்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

அதுபோன்று இந்த ரமழானுடைய நோன்பில் நம்முடைய முஸ்லிம் மக்களுக்காகவும் உலக மக்களுக்காகவும் நாம் துஆ செய்ய வேண்டிய மிகப்பெரிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இஸ்லாமுக்கு எதிராக தீட்டப்படக்கூடிய சதிகள் அதிலே முஸ்லிம்கள் உணர்ந்தும் உணராமலும் விழுந்து விட்டு மிகப்பெரிய ஆபத்துக்களை சந்தித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

நமது முஸ்லிம் வாலிபர்களை இந்த நேரத்தில் நாம் மீட்டெடுக்கவில்லையென்றால் அவர்கள் தவறான பாதைக்கு சென்று விட்டால் அதனால் ஒட்டுமொத்த சமுதாயமும் மிகப்பெரிய அவமானத்தையும் மிகப்பெரிய பாதிப்பையும் சந்திக்கவேண்டிய நிலைக்கு ஆளாகி விடுவோம். அல்லாஹ் பாதுகாப்பானாக!

ஆகவே, அல்லாஹ்வுடைய மார்க்கத்தை அதனுடைய சரியான நிலைப்பாட்டோடு அணுகி, மார்க்க அறிஞர்களிடத்திலிருந்து கல்வியைப் பெற்று, நமது சமுதாய மக்களை விட்டுக் கொடுத்தல், மன்னித்தல் அதுபோன்று பரஸ்பர அன்பு, இந்த சமுதாயத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? ஆக்கப்பூர்வமான பங்களிப்பை நான் எப்படி கொடுக்க வேண்டும்? என்பதை அறிந்து புரிந்து அதற்கேற்ப மார்க்கத்தைப் பின்பற்றி பிற மக்களுக்கும் மார்க்கத்தை அழகிய முறையில் எடுத்து சொல்லக்கூடிய அந்தப் பக்குவத்தை நல்ல வாய்ப்பை நம்முடைய வாலிபர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

நம்முடைய வாலிபர்கள் எங்கு செல்கிறார்கள்? யாருடன் பழகுகிறார்கள்? எதைப் பார்க்கிறார்கள்? எந்த சிந்தனையில் இருக்கின்றார்கள்? என்பதை நாம் கண்காணித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

அவர்களில் முரண்பாடான போக்கு காணப்படுமேயானல் அவர்கள் யாரிடத்திலாவது பயங்கரவாத சிந்தனைகள் தெரியவருமேயானால் அவர்களை அறிஞர்களிடத்தில் அழைத்து சென்று அவர்களுக்கு உண்டான சரியான விளக்கம் கொடுக்கப்பட்டு அவர்களை நாம் திருத்தியாக வேண்டும்.

அல்லாஹ் சுபஹானஹு தஆலா நமது சமுதாயத்தையும் உலகத்தில் உள்ள அத்தனை முஸ்லிம் சமுதாயங்களையும் பாதுகாத்து அருள்வானாக! அல்லாஹு தஆலா நிம்மதியையும் பாதுகாப்பையும் கொடுத்து அல்லாஹ்வுடைய மார்க்கத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லி அல்லாஹ்வின் மார்க்கத்தின் பக்கம் அழைக்கக்கூடிய அழைப்பாளர்களாகவும், அல்லாஹ்வை வணங்கக் கூடிய வணக்கசாலிகளாகவும், அல்லாஹ்வுடைய மன்னிப்பைப் பெற்ற நன்மக்களாகவும், என்னையும் உங்களையும் எல்லா மக்களையும் ஆக்கி அருள்வானாக!

**ஆமீன்**

أقول قولي هذا أستغفر الله لي ولكم ولسائر المسلمين من كل ذنب فاستغفروه إنه هو الغفور الرحيم

**குறிப்புகள் :**

குறிப்பு 1)

حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ سَعْدٍ الْحَافِظُ، أَخْبَرَنِي مُوسَى بْنُ عَبْدِ الْمُؤْمِنِ، ثنا هَارُونُ بْنُ سَعِيدٍ الْأَيْلِيُّ، ثنا عَبْدُ اللَّهِ بْنُ وَهْبٍ، أَخْبَرَنِي حُيَيُّ بْنُ عَبْدِ اللَّهِ، عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ الْحُبُلِيِّ، عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللَّهُ عَنْهُمَا، أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: " الصِّيَامُ وَالْقُرْآنُ يَشْفَعَانِ لِلْعَبْدِ، يَقُولُ الصِّيَامُ: رَبِّ إِنِّي مَنَعْتُهُ الطَّعَامَ وَالشَّهَوَاتِ بِالنَّهَارِ فَشَفِّعْنِي فِيهِ، وَيَقُولُ الْقُرْآنُ: مَنَعْتُهُ النَّوْمَ بِاللَّيْلِ فَيُشَفَّعَانِ «.» هَذَا حَدِيثٌ صَحِيحٌ عَلَى شَرْطِ مُسْلِمٍ، وَلَمْ يُخَرِّجَاهُ" (المستدرك على الصحيحين للحاكم – 2036)

DARUL HUDA
211(102), FIRST FLOOR, LINGHI STREET, MANNADY, CHENNAI – 600001.
muftiomar@gmail.com, 044 25247866, 9840174121, 9884469044
Facebook: https://www.facebook.com/muftiomarsheriffqasimi/
Youtube: https://www.youtube.com/channel/UC4CmuDuplV91jmQ2jX32Iwg?view_as=subscriber
Website: http://www.darulhuda.net/